DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's Name | : | சுப்பிரமணி |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | LIC |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 05th day of June 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது பாலிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். LIC யில் வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன முனிராஜ் எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 15.07.2022 ஆம் தேதி காலை சுமார் 06.00 – 06.30 மணியளவில் நான் PSV கல்லூரி மைதானத்தில் இருந்த போது அருகில் இருந்தவர்கள் தகவல் சொல்ல நான் ஒரப்பம் பேருந்து நிறுத்தம் அருகே முனிராஜ் அவர்களுக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றேன். முனிராஜ் அடிபட்டு கீழே விழுந்து கிடந்தார். நான் சம்பவ இடம் சென்ற போது ஆம்புலன்சில் எடுத்து சென்றிருந்தனர். முனிராஜ் அவர்களுக்கு ஒரு கார் டச் ஆகி கண்டெய்னர் லாரியில் விழுந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். அதன் பிறகு நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு முனிராஜ் இறந்து விட்டிருந்தார். நான் முனிராஜ் அவர்களின் பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். கந்திக்குப்பம் போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

நீங்கள் சம்பவ இடம் சென்ற போது விபத்தில் இறந்து போனவர் அங்கிருந்தாரா என்றால் நான் செல்வதற்குள் அவரை ஆம்புலன்சில் ஏற்றிச் சென்று விட்டனர். நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போனவரையும் பார்க்கவில்லை, போலீசாரும் உங்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.